**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்**

2026 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 22 ஆம் நாள் வியாழன் கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி. க.இந்துமதி, கிரேடு III பென்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No. 298/2017** வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | சேகர் (எ) சந்திரசேகர் | **வயது** | : | 69 |
| **த.பெ** | : | பலராமன் | **தாலுக்கா** | : | சேத்பட் |
| **கிராமம்** | : | சேத்பட் | **தொழில்** | : | டிரைவர் |

**22.01.2026 – வா.சா.1 குறுக்கு விசாரணை**

1)நான் எத்தனை வருடங்களாக பெங்களூரில் வசித்து வருகிறேன் என்றால் 20 வருடங்களாக வசித்துவருகிறேன். பெங்களூரில் தான் நான் திருமணம் செய்தேன், ஆகையால் அங்குதான் வசித்து வருகிறேன். நான் என் தாவாவில் பெங்களூரின் முகவரி என்று கதவு எண் 82, நடுத்தெரு, கோலப்ப நகர், கோவிந்தசெட்டிபாளையம் ரோடு, பெங்களூர் 68, ஒசூர் மெயின் ரோடு என்று உள்ளது அங்குதான் நான் வசித்துவருகிறேனா என்றால் சரிதான். மேலும் 2 ம், 5 ம், 7 ம் வாதிகள் மேற்படி பெங்களூர் முகவரியில் தான் வசிததுவருகிறார்கள் என்று தாவாவில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வாதிகளும் என்னுடன் 20 வருடங்களாக பெங்களூரில் தான் வசித்துவருகிறார்கள் என்றால் சரிதான்.

2)1 ம் வாதி மற்றும் 6 ம் வாதி அவலூர்பேட்டையில் உள்ளார்கள், மேலும் 4 ம் வாதி சேத்பட்டு தருமராஜா கோவில் தெருவில் வசித்துவருகிறார்கள் என்று தாவாவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய ஆதார் கார்டு, வாக்காளர் அடையாள அட்டை, ரேசன் கார்டு பெங்களூர் முகவரியில் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 5 ம் வாதி ரவி பெங்களூரில் 5, 6 வருடங்கள் இருந்துவிட்டு சேலத்திற்கு வந்துவிட்டார் என்றால் சரிதான். ஆனால் முதல் விசாரணை வாக்குமூலத்தில் என்னுடைய முகவரி பழம்பேட்டை கிராமம், சேத்பட் என்று குறிப்பிட்டுள்ளேன், எதற்காக நான் வழக்குரையில் பெங்களூர் முகவரியை குறிப்பிட்ட பிறகு என்னுடைய முதல்விசாரணையில் பெங்களூர் முகவரியை குறிப்பிடவில்லை என்றால் சேத்பட்டில் என் தங்கை பானுமதி வீடு உள்ளதால் அங்கு வந்து பெங்களூருக்கு போவேன்.

3)எனக்கு மேற்படி சேத்பட் முகவரிக்கு என்னுடைய ஆதார்அட்டை ஆகிய அடையாள அட்டைகள் எதுவும் அந்த முகவரி தெரிவித்து இல்லை என்றால் தற்போது இல்லை, 2005 ல் இருந்தது. 5 ம் வாதி தற்போது உயிரோடு இல்லை, இறந்துவிட்டார் என்றால் சரிதான். 8 முதல் 10 வாதிகள் தான் மேற்படி காலமான 5 ம் வாதியின் வாரிசுதார்கள் என்றால் சரிதான். ரவி என் மீதும் மற்ற 14 பேர்கள் மீதும் இந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 403/2010 தாக்கல் செய்து அதில் எனக்கு சம்மன் வந்ததா என்றால் சம்மன் எதுவும் வரவில்லை. நான் எந்த சர்வே நெம்பருக்கு

வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சர்வே நெம்பர் 145. வழக்கு சொத்தின் சக்குபந்தி நான் சொல்லமுடியுமா என்றால் தெற்கில் ஜானி சாயபு, மேற்கில் அண்ணா தெரு, கிழக்கில் பாட்டை ரோடு, வடக்கில் தரணி அம்மாள் நிலம் உள்ளது.

4)நான் சர்வே நெம்பர் 143 மற்றும் 145 ஆகிய 2 சர்வே நெம்பருக்கும் சேர்த்து தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்கள் நபிகள் நாயகம் தெருவில் உள்ளது என்றால் சரிதான். நானும், மற்ற வாதிகளும் வழக்கு சொத்திற்கு சென்று சுமார் 20 வருடங்கள் ஆகிறது என்றால் 2010 ல் சென்றேன், ஆனால் வழக்கு சொத்திற்கு செல்ல அனுமதிக்கவில்லை. என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாகபிரிவினைக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் எதற்காக 1ம் மற்றும் 3ம் பிரதிவாதி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அவர்கள் 2ம் பிரதிவாதி தரணி அம்மாளிடமிருந்து கிரையத்திற்கு வழக்க சொத்திலிருந்து சில சொத்தை கிரையமாக பெற்றுள்ளார்கள் ஆகையால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன், தரணி அம்மாள் மேற்படி சொத்தை 1மற்றும் 3ம் பிரதிவாதிக்கு விற்றிருக்ககூடாது ஆகையால் அவர்கள் மீதும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

5)1 மற்றும் 3ம் பிரதிவாதிகள் 2ம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் பெற்றதற்கு கிரையபத்திரங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தரணி அம்மாளுக்கு வழக்கு சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்று வில்லங்க சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி கிரையபத்திரம் மற்றும் வில்லங்க சான்று எதுவும் தாக்கல் செய்யபடவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்து வாதிகள் பெயரில் உள்ளது என்பதற்கு ஆவணங்கள் எதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் பலராம உடையாருக்கு வாரிசு என்பதற்கு நான் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, பள்ளி சான்றிதழை தாக்கல் செய்துள்ளேன்.

6)பலராமன் உடையார் அவர்களுடன் நாங்கள் வசித்ததற்கு குடும்ப அட்டை தாக்கல் செய்துள்ளேனா என்றால் குடும்ப அட்டை அப்போது இல்லை. (சாட்சி தற்போது என்ன ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டது தெரியாது என்று கூறுகிறார்) பலராமன் அவர்களுக்கு வாதிகள் தான் வாரிசு என்பதற்கு வேறு எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யபடவில்லை என்றால் பள்ளி சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன். நான் எடுத்த ஓட்டுநர் உரிமம் உள்ளது, என்னுடைய ஆதார் அட்டையிலும், பேன்கார்டிலும் பலராமன் அவர்களின் பெயர்கள் உள்ளது. பலராமன் எப்போது இறந்தார் என்றால் 1975ல் இறந்தார். எந்த முகவரியில் இறந்தார் என்றால் எனக்கு தெரியாது (சாட்சி தற்போது வழக்கு சொத்தில் உள்ள வீட்டில் தான் அவர் தந்தை இறந்துவிட்டதாக கூறுகிறார்)

7)பலராமன் அவர்களின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பலராமன் அவர்களின் இறப்பு சான்றிதழ் வைத்து வாரிசு சான்றிதழ் பெறுவதற்கு வட்டாட்சியர் அலுவலகத்திலோ, நீதிமன்றத்திலோ மனு செய்து வாங்கினேனா என்றால் இல்லை. இன்றுவரை மேற்படி வாரிசு சான்றிதழ் பெறவில்லை என்றால் இல்லை. வாதிகளுக்குள்ளே எந்த மனவருத்தமும் இல்லை என்றால் இல்லை. 5ம் வாதி என் மீது தாக்கல் செய்த அசல் வழக்கு எண்

403/2010 05.09.2014 ல் **தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.**

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரஉண ஒத்திவைக்கப்படுகிறது.)

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

SALMA BASEER

Digitally signed by SALMA BASEER
Date: 2026.01.23 11:18:49 +0530

District Munsif,
Polur.